18th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இப்பொழுது தான் சொன்னேன். மரம் ரோட்டிலே இருந்ததால் போலீஸ் அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தார்கள் ; ஆனால், அந்த வழக்கு அரசாங்கத்திற்கு விரோதமாகப் போய்விட்டது ; வழக்கைத் தள்ளுப்படி செய்தார்கள் கோர்ட்டார் என்று சொன்னேன்.

Scholarships for M.Sc. (Agriculture) Course

* 474 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is a proposal by the Government to award full scholarships (educational and residential) to the students doing M.Sc. (Agriculture) in the Government College at Coimbatore; and

(*b*) if so, whether there is a proposal to extend the same facilities to the students doing M.Sc. (Agriculture) in the Annamalai University?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The following concessions have been granted :

(1) Merit scholarships of Rs. 150 per mensem each to ten students.

(2) Grant of study leave on half pay for five students

(3) Exemption from payment of tuition fees of Rs. 200 per annum for all students from the Madras State.

(*b*) No Sir.

SRI S. LAZAR : கல்விச் சம்பளத்தைத் தள்ளிக்கொடுத்ததுபோல, அண்ணாமலை யூனிவர்ஸிடியில் இருக்கும் எம். எஸ்ஸி. வகுப்பு மாணவர்களுக்கும் இதுபோன்ற சலுகையை அரசாங்கம் கொடுக்குமா ? அண்ணாமலை யூனிவர்ஸிடியில் ஏற்படுத்தியிருக்கும் இந்தப் படிப்பு ஆசியா கண்டத்தில் வேறு எங்குமே இல்லை என்று சொல்வது உண்மையா ? இதை ஊக்குவிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அண்ணாமலை சர்வகலாசாலையில் அளிக்கப்படுகிற படிப்பின் தரத்தைப்பற்றி தனியாகக் கேட்டால் பதில் அளிக்கிறேன். அரசாங்கத்திலே ஊழியம் செய்கிற சில பேர்கள் மாணவர்களாக போஸ்டு-கிராஜுவேட் ஸ்டடிக்காக கோவையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த சலுகை காட்டப்படுகிறது. அண்ணாமலை சர்வகலாசாலையிலே வாசிக்கும் மாணவர்களுக்குச் சலுகை காட்டும் உத்தேசம் இப்பொழுது இந்த அரசாங்கத்திடம் இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether there is any proposal to strengthen the M.Sc. course?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question of further strengthening the M.Sc. course is now and then being considered and decisions are being taken.

SRI K. RAMACHANDRAN : எம்.எஸ்ஸி. கோர்ஸ் என்றால் அதில் வெகுசில மாணவர்கள்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதிலே ஏழைகளாக உள்ளவர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முறையிலே ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் ஒருசில அளவுக்காவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

[18th March 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது என்ன என்ன ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு நான் இப்பொழுது விவரம் தெரிவித்தேன். அதற்குமேலே என்ன சலுகை வேண்டுமென்று அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

SRI T. S. RAMASWAMY : அயல் நாட்டில் விவசாயத்தில் உயர்தரக் கல்வி பெறும் மாணவர்களுக்கும் இதே சலுகை கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் அவ்வாறு குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட்ட ஒரு நாட்டிலே உயர்தரக் கல்வி பெறவேண்டுமென்று கருதினால், அப்பொழுது அரசாங்கம் அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளும். அரசாங்கத்தில் உத்தியோகத்தில் இருப்பவர்கள் தாங்களாகவே போய் படிக்கவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு "லீவ்" போன்ற சில வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

SRI A. VEDARATHNAM : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விவசாயத்தை இசை மூலம், சங்கீதத்தின் மூலம் வளர்க்கக்கூடிய ஆராய்ச்சி இருக்கிறதே, அது மிகச் சிறந்த ஒரு முறை ஆனதினாலே, இந்தத் துறையில் ஈடுபடும் மாணவர்களுக்காவது சலுகை காட்டும் வகையில் நிதி உதவி அளிக்க நமது அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நானே சில மாதங்களுக்கு முன்பு அண்ணாமலை சர்வகலாசாலையில் நடைபெறுகிற விவசாய ஆராய்சசியைப் பார்த்தேன். ஆனால், இசை மூலம் செய்யப்படுவது பற்றி இன்னும் எனக்குத் தகவல் தெரியாது.

SRI A. GOVINDASAMY : அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே எம்.எஸ்ஸி. படிக்கும் மாணவர்களுக்கு தற்சமயம் சலுகை கொடுக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். எதிர்காலத்திலாவது அவர்களுடைய பொருளாதார நிலையைக் கவனித்து, கோயமுத்தூரில் படித்தாலும், சென்னையில் படித்தாலும், அண்ணாமலை சர்வகலாசாலையில் படித்தாலும், பாகுபாடு செய்யாமல், எல்லா இடங்களிலும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே பாகுபாடு ஒன்றும் இல்லை. எதிர்காலத்தைப்பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை. ஆகையால்தான், "தற்சமயம்" என்று சொன்னேன்.

SRI S. LAZAR : எப்படி வேலையிலிருந்து "லீவ்" எடுத்துக் கொண்டு கோயமுத்தூரில் படிக்கிறார்களோ, அதேபோல அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயும் சேர்ந்துள்ளார்களே, அவர்களுக்காவது அரசாங்கம் இந்தச் சம்பளச் சலுகையைக் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் பார்த்து பதில் சொல்லலாம்.

Loan facilities to the landless agricultural labourers

* 475 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு கிராமக் கடன் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்க வசதி செய்வதற்கான திட்டம் ஒன்றை வெளியிடுவது பற்றிய பரிசீலனை அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு நடத்தப்பட்டவரின் விவரங்கள் யாவை ?